**தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபை - 2019**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்றுவிப்பு அதிகார சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்புடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகார சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைபழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையினை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்றவரையில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகார சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகார சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- அதிகார சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1. நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும். பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு வவுச்சர், கொடுப்பனவு வவுச்சர் முதலிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணுதல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.5.2. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்படு வாழ்க்கை காலம் வருடாந்த மதிப்பிடப்பட்டிராமையின் காரணத்தினால் கிரயம் ரூபா 125,829,561 ஆன மோட்டார் வாகனம் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்த போதிலும் இன்னுமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீட்டு குறைப்பாடு இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபையின் மோட்டார் வாகனங்கள் உள்ளடங்கலாக ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பிடல் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன் 2021 கணக்குகளில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் நடைமுறையல்லாச் சொத்துக்கள் தேய்மானம் செய்யும் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் தேய்மானம் கணிக்கும் போது ஏற்பட்ட குறைப்பாட்டினால் மீளாய்வாண்டிற்கான தேய்மான செலவினம் ரூபா 1,036,737 | 4 சொத்து வகையீடுகளுக்குரிய மீளாய்வாண்டின் தேய்மானம் ரூபா 2,766,966.00 அன்று ரூபா 1,036,737.28 என குறைவாக கணிக்கப்பட்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் 803,808,809 நாளேட்டு குறிப்பிக்கள் ஊடாக திருத்தப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீட்டு கொள்கை பிரகாரம் தேய்மானம் கணிக்கப்படல் சரியாக மேற்கொள்ளல் |

| | | |
|---|---|---|
| குறைவாக கணக்கிடப்பட்டிருந்தமையின் காரணத்தினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப் பெறுமானத்தினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஆ) வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட காணிக்கு தொடர்புடையதாக 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு தொடர்படையதாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 6,070,000 ஆன குத்தகை கூலி கடந்த ஆண்டின் இலாபத்திற்கு சீராக்கப்படுவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் செலவொன்றாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கின்றமையினால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை அப் பெறுமானத்தினால் அதிகமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டது. | எதிர் காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாது கணக்குகள் தயாரிப்பதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்காத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நானாவித செலுத்தல்கள் | ரூபா. 3,634,377 | கொடுப்பனவு வவுசர் | கணக்காய்வு ஐயவினா ஊடாக காண்பிக்கப்பட்டுள்ள கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்குரிய இந்த 39 வவுசர்கள் தொடர்பாக தேடியறியப்பட்டு கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அனைத்து கொடுப்பனவு வவுசர்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இற்கு கூட்டுத்தொகை ரூபா 110,783,640 ஆன பெற வேண்டிய கடன் மீதியினுள் 02 ஆண்டுகள் தொடக்கம் 14 ஆண்டுகள் இடையேயான காலப்பகுதியினுள் அறவிடப்படாத கூட்டுத்தொகை ரூபா 38,254,776 ஆன நானாவித கடன்பட்டோர் மீதி மற்றும் கூட்டுத்தொகை ரூபா 966,107 | பதவியணி கடன் மற்றும் முற்பண தொகையில் ரூபா 966,107.00 ஆன தொகை நிறுவனத்திலிருந்து விலகி சென்னற பதவியணியிடமிருந்து பெறப்பட வேண்டிய தொகையாவதுடன், அப் பணம் முறையாக அறவிடப்பட்டு வருகின்றது. எஞ்சிய பதவியணி கடன் மற்றும் முற்பணம் மாதாந்த | பெற வேண்டிய பணம் விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| ஆன ஊழியர் கடன் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இந்த கடன் மீதிகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பளத்திலிருந்து அறவிடப்பட்டு வருகின்றது. இன்னுமாக அறவிடப்பட வேண்டியுள்ள ஏனைய கடன் பட்டோர் மீதி ரூபா 7,127,295.00 ஆக காணப்படுவதுடன், இந்த பணத்தொகை அறவிடப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 1.6.2 செலுத்தப்பட வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இற்கு கூட்டுத்தொகை ரூபா 265,123,534 ஆன செலுத்தப்பட வேண்டிய மீதியினுள் 02 ஆண்டுகள் தொடக்கம் 12 ஆண்டுகள் இடையேயான காலப்பகுதிக்குரிய செலுத்த வேண்டிய முற்பணம் மீதி மற்றும் நானாவித கடன் கொடுநர்களின் கூட்டுத்தொகை பெறுமதி ரூபா 60,006,839 உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இந்த கடன் மீதி தீர்க்கப்படுவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 265,123,534.00 ஆன செலுத்தப்பட வேண்டிய மீதி பணமாக ரூபா 74,131.406.00 ஆன தொகை செலுத்தப்பட வேண்டிய வைப்புக்களாவதுடன், அதில் ரூபா 4,567,683.000 ஆன தொகை 2020.12.31 இற்கு தீர்க்கப்பட்டிருந்தது. நானாவித கடன் கொடுநர் மீதியில் ரூபா 11,242,366.00 மற்றும் திரட்டப்பட்ட செலவின் மீதியான ரூபா 157,501,878 ஆன தொகை 2020 ஆம் ஆண்டினுள் தீர்க்கப்பட்டுள்ளது. | செலுத்தப்பட வேண்டிய மீதி விரைவாக தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாண கோவை | | | |
| | நிதி பிரமாணம் 757(2) | ஆண்டு இறுதியில் அனைத்து பொருள் ஆய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பினும் பிரதான அலுவலகம் மற்றும் 06 மாவட்ட அலுவலகங்களுக்கு தொடர்புடைய பொருள் ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கு தொடர்புடைய அதிகார சபையின் அனைத்து அலுவலகங்களும் உள்ளடக்கப்படும் விதத்தில் பொருள் ஆய்வு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்தது. அவசரமான ஏற்பட்ட Covid 19 தொற்று நிலையின் காரணத்தினால் சில அலுவலகங்களில் மேற்கொள்ள முடியாது போனது. எவ்வாறாயினும் 2020 ஆம் ஆண்டிற்குரிய இந்த இடங்களும் உள்ளடக்கப்படும் வகையில் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2015 யூலை 14 திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| i. | நிதிப் பிரமாணம் 371/5 ஆம் பந்தி | கட்டுநிதி வழங்கப்பட்ட நிதி ஆண்டின் திசெம்பர் 31 இற்கு மேலதிகமாக தீர்க்கப்படல் தாமதமாக்கப்பட கூடாதிருப்பினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 | சில மாவட்ட அலுவலகங்களில் 2019.12.31 இற்கு தீர்க்கப்படுமாறு ஆலோசனை கொடுக்கப்படினும் | குறித்த வண்ணம் முற்பணம் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இற்கு ரூபா 3,823,220 ஆன தீர்க்கப்படாத இடைக்கால கட்டுநிதி மீதியொன்று காணப்பட்டது. | தீர்க்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. நிகழ்காலத்தில் அனைத்து கட்டுநிதியும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இவ்வாறான குறைப்பாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |
| ii. | நிதி பிரமாணம் 371(2) b ஆம் பந்தி | ஒரு சந்தர்ப்பத்தின் போது ஒரு பதவி நிலை உத்தியோகத்தருக்கு உயர்ந்த பட்சமாக ரூபா 100,000 ஆன தற்காலிக இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட முடியுமான போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டில் 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 108,800 தொடக்கம் ரூபா 397,270 வரை தற்காலிக இடைகால கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் பணிக்கப்படுள்ளது. | குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

----------------

### 2.1 நிதி விளைவு

----------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 12,027,810 ஆன மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 16,887,271 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 4,859,461 ஆன வீச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஊழிய கிரயம் அதிகரித்தல் மற்றும் மூதலன சொத்து தேய்மானம் உயர்வடைந்தமை பிரதான காரணமாகியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய பயிலுநர் நிறுவனத்தில் பயிலுநர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மர பொருட்கள் விற்பனை செய்யும் நோக்கத்தில் 2014 மற்றும் 2016 காலப்பகுதியினுள் ரூபா 18,847,771 செலவிடப்பட்டு நிறுவ பூமியில் நிர்மாணிக்கப்பட்ட கண்காட்சி கட்டிடம் மற்றும் 02 தேசிய பயிலுநர் நிறுவனங்களின் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 2,863,475 மற்றும் 790,500 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் 2021 யூன் மாதம் வரையும் எந்தவொரு பயன்பாடுமன்றி விளைவற்றதாக காணப்பட்டது. | இந்த கண்காட்சி கட்டிடம் எதிர்கால நிறுவன செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டிருந்ததுடன், அதன் நீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மும்முனை மின்சாரம் பெற்றுக் கொள்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நீண்ட காலமாக விளைவற்றதாக காணப்படுகின்ற சொத்துக்கள் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். புதிய செயற்திட்டம் நிர்மாணிக்கப்படும் போது சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் வெற்றி தொடர்பாக மீளாய்வின் பின்னர் பணம் செலவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | தேசிய பயிலுநர் நிறுவனத்தின் நிர்மாணிப்பு பிரிவின் பல்பணி நிர்மாணிப்பு கற்கைநெறிக்கு 2018 ஆம் ஆண்டின் பின்னர் பயிலுநர்கள் இணைக்கப்பட்டு கற்கைநெறிகள் நடத்தப்படாமை காரணத்தினால் பயிற்சி உபகரணங்கள் 84 இற்கு தொடர்புடைய 3,459 உறுப்படிகள் அழிந்து காணப்படுகின்றதுடன் 2020 சனவரி மாதத்தில் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | பல்பணி நிர்மாணிப்பு கற்கைநெறி ஆரம்பித்தல் ஏற்பட்டிருப்பது நிறுவனத்தில் அப்போதிருந்த 05 பயிற்சி பிரிவுகள் சேர்ந்தாகும். அப் பிரிவின் கருவிகள் மற்றும் உபகரணங்கள் இந்த கற்கைநெறிக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அக் கற்கைநெறிக்காக விசேடமாக கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டின் பின்னர் இந்த கற்கைநெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பினும் போதுமான விண்ணப்பதாரிகள் முன்வரப்படாததினால் கற்கைநெறி நடத்திச் செல்வதற்கு முடியாது போனது. | குறித்த கற்கைநெறிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிக்காட்டி கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 பந்திகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் முழு கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படாது மற்றும் வழிக்காட்டி கோவையின் 5.3.1 (ஈ) பந்திக்கு முரணாக தொழிநுட்ப மீளாய்வு குழுவின் அங்கீகாரம் பெறப்படாத விலைமனு ஆவணங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு ஒப்பந்தக்காரரொருவர் தெரிவு செய்யப்பட்டு தேசிய பயிலுநர் நிறுவனமொன்றின் பழைய இரண்டு மாடி கட்டிடமொன்று ரூபா 8,381,900 செலவிடப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு அவ் தங்குமிடம் பயன்பாட்டிற்காக 2019 ஆம் ஆண்டில் ரூபா 485,185 செலவிடப்பட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் இந்த கட்டிடம் மற்றும் உபகரணங்கள் 2021 யூன் மாதம் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும். இனி பெறுகை வழிக்காட்டியின் 4.3.1 மற்றும் 4.3.2 இற்கு அமைவாக முழு கிரய மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது பெறுகை வழிக்காட்டி கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | தேசிய பயிலுநர் நிறுவனத்தின் கீழ் காணப்படுகின்ற அச்சு பிரிவிற்காக காகித எழுதுபொருட்கள் கொள்வனவு செய்யப்படும் போது பெறுகை வழிக்காட்டி கோவையின் 4.4.2 பந்திக்கு முரணாக போட்டி விலைக் கோரல் மேற்கொள்ளப்பட்டு பொருட்கள் கொள்வனவு செய்வதிலிருந்து விலகுவதற்காக தலைவருக்கு அங்கீகரிக்கப்படக் கூடிய கொள்வனவு எல்லை வரை கொள்வனவுகள் பிரிக்கப்பட்டு ரூபா 500,000 ஆன எல்லையின் கீழ் விலைமனு கோரப்படாது ஒரே நிறுவனத்திடம் வெவ்வேறு விலைகளின் கீழ் மீளாய்வாண்டினுள் கூட்டுத்தொகை ரூபா 8,850,721 ஆன அச்சு காகித எழுதுபொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அக் காரணத்தினால் நிறுவனத்திற்கு பெறக்கூடியதாகவிருந்த கழிவுகள் மற்றும் அதிக போட்டிக்கு ஈடுப்படுத்தப்படுவதனால் பெறக் | அச்சு நடவடிக்கைகளுக்காக கட்டளை பெறப்பட்டவுடன் அதற்காக தேவையான காகித பூச்சு மற்றும் ஏனைய இரசாயன பொருட்கள் கொள்வனவு செய்யும் போது விலைமனு கோரப்பட்டு கொள்வனவு செய்வதற்கு நீண்ட காலம் கடப்பதினால் அச்சு நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற தாமதங்கள் குறைத்துக் கொள்வதற்காக இந்த முறை பின்பற்றப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலை ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிக்காட்டி கோவையின் ஏற்பாடு பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

கூடியதாகவிருந்த பொருளாதார நலன்கள் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே காணப்படும் இருப்பு மீதிகள் கருத்திற் கொள்ளப்படாது கொள்வனவு செய்யப்பட்டமையினால் அச்சு பூச்சு மற்றும் வெவ்வேறு மூல பொருட்கள் வகை 11 இற்கு தொடர்புடையதாக 92 உறுப்படிகள் காலாவதியாகியிருந்தது.